(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **21 PTM 311**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் - 2022**

**ஏம்.ஏ-தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**மூன்றாம் பருவம்** **நேரம் : 3 மணி**

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. அகத்திணையின் வகைகள் யாவை?

   அ. ஐந்து ஆ. ஆறு இ. ஏழு ஈ. எட்டு

2. வாகை திணையின் புறன் எது?

   அ. பாலை ஆ. மருதம் இ. முல்லை ஈ. நெய்தல்

3. பெருமையும் உரனும் யாருக்குரியது?

   அ. மகடூஉ ஆ. ஆடூஉ இ. சிறார் ஈ. இருபாலர்

4. மொழி எதிர் மொழிதல் யாருக்கு உரியது?

   அ. தலைவி ஆ. தலைவன் இ. தோழி ஈ. பாங்கற்கு

5. இறைச்சி அமையும் பொருள் எது?

   அ. கருப்பொருள் ஆ. உரிப்பொருள் இ. முதற்பொருள் ஈ. எதுவுமில்லை

**ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.** (K2)

6. கைக்கிளை என்றால் என்ன?
7. புறத்திணையின் வகைகள் எத்தனை?
8. நாட்டத்தின் இரண்டு வகை யாது?
9. கரணம் பொருள் விளக்கம் தருக.
10. மரபு - வரையறு.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ ( 5X4=20 மதிப்பெண்கள்**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) ஐந்திணைக்குரிய சிறுபொழுதின் வகைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ. பெருந்திணை பற்றிக் குறிப்பு வரைக.

12. அ. வெட்சித் திணையின் பதினான்கு துறைகள் யாவை?

**(அல்லது)**

ஆ. ‘‘உழிஞை தானே மருதத்துப் புறனே’’- பொருத்திக் காட்டுக.

13. அ. பெண்பாற்கு உரிய இயல்பாக தொல்காப்பியர் மொழிவது யாது? சான்று தருக.

**(அல்லது)**

ஆ. குறியின் இருவகைகளை விளக்கி வரைக.

14. அ. ‘‘உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்

நடக்கை யெல்லா மவர்கட் படுமே’’ - இந்நூற்பா தரும் செய்தி யாது?

**(அல்லது)**

ஆ. செலவழுங்கல் குறித்து எழுதுக.

15. அ. பொருளியலில் தோழி அறத்தோடு நிற்றல் எவ்வாறு?

**(அல்லது)**

ஆ. இறைச்சி - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி - இ (4X10=40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5)**

16. ஐவகை திணைகளுக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களின் தன்மைகளை எழுதுக.

17. தும்பைத்திணையின் துறைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

18. களவொழுக்கத்தில் தோழிக்குரிய செயல்களாக தொல்காப்பியர் கூறுவதைத் தொகுத்துரைக்க.

19. கற்பு ஒழுக்கத்தில் தலைவனுக்குரிய சிறப்புகளை வரிசைப்படுத்துக.

20. அகம் சார்ந்த மரபுகளால் தலைவியின் பண்பு நலன்கள் சிறப்புற்றிருக்கிறது விளக்குக.

21. காட்டலாகாப் பொருட்களாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை விவரிக்க.

**********

*ETHICAL PAPER*